<u>**சாதாரண கூட்டம்**</u>

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2020ம் ஆண்டு** மே மாதம் 30 நாள் திங்கட்கிழமை காலை 11.00 **மணிக்கு நடைபெற்ற** சாதாரணக் **கூட்ட நடவடிக்கைகள்**

| **மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள்** | **வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள்** | **மன்றத்தின் தீர்மானம்** |
|---|---|---|
| 30.05.2022 | **பொருள் எண் 1**<br>நகராட்சி ஆணையர் அவர்களது ஏப்ரல் 2022 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:- 44 அனுமதிக்கப்பட்டது** |
| 30.05.2022 | **பொருள் எண் 2**<br>நகராட்சி பொறியாளர் அவர்களது ஏப்ரல் 2022 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1) | **தீர்மானம் எண்:- 45 அனுமதிக்கப்பட்டது** |
| 30.05.2022 | பொருள் எண் 3<br>சொத்துவரி/காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அரசாணை(நிலை) எண் 52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.4) நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள் 01.04.2022 ஆகியவற்றின் அடிப்படையில், சொத்துவரி/காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022-2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்திட நகர்மன்ற 11.04.2022 தேதிய 11ம் எண் தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து இந்நகராட்சியில் நீண்ட காலமாக மண்டல மதிப்பு சமசீரற்ற நிலையில் உள்ளதை திருத்தம் செய்யப்பட வேண்டும் என பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை தொடர்ந்து மண்டல மதிப்பு மற்றும் மண்டல வாரியாக தெருக்கள் விவரம் திருத்தம் செய்யப்பட்டுள்ளதை இந்நகர்மன்றம் 22.04.2022 ஆம் தேதிய 28ம் எண் தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, பொதுமக்கள் / சொத்து உரிமையாளர்களின் சொத்துவரி சீராய்வு செய்யும் பணி தொடர்பாக ஆட்சேபணைகள்/ஆலோசனைகள் ஏதும் இருப்பின் 30 தினங்களுக்குள் நேரிடையாகவோ / இணையதளம் மூலமாகவோ சமர்ப்பித்திட பொதுமக்கள் அறிந்திடும் வகையில் தினசரி நாளிதழில் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) மற்றும் அலுவலக விளம்பர பலகையிலும் விளம்பரப்படுத்தப்பட்டது. 30 தினங்கள் கடந்த நிலையில் பொதுமக்கள்/சொத்துஉரிமையாளர்களிடமிருந்து ஆட்சேபணைகள் / ஆலோசனைகள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே நகர்மன்ற 11.04.2022ம் தேதிய தீர்மான எண் | **தீர்மானம் எண்:- 46 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | 11 மற்றும் 20.04.2022ம் தேதிய தீர்மான எண் 28ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறு 2022-2023 முதலாம் அரையாண்டு முதல் (01.04.2022) சொத்துவரி சீராய்வு செய்திட, உறுதி செய்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண். 241/2022/அ1) | |
| 30.05.2022 | பொருள் எண் 4<br>இந்நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக தூய்மை பணியாளர்களை கொண்டு குப்பைகளை தரம் பிரித்து வாங்கும் பணி சமுதாய உரக்கிடங்குகள் அமைத்து உரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே இப்பணிக்க்க இந்நகர் மன்ற தீர்மான எண் 1013 நாள் 24.01.2022ல் ரூ.25,00,000/-க்கு மாவட்ட ஆட்சியர் திருவாரூர் அவர்களின் தினக்கூலி விகித அடிப்படையில் மேற்படி தூய்மை பணியாளர்களை பணி அமர்த்தி பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு தீகரன சமூக தொண்டு நிறுவனம் மூலம் 01.03.2022 முதல் 31.05.2022 வரை பணி மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் தூய்மை பணியாளர்களை வெளிக்கொணர்வு அடிப்படையில் நியமனம் செய்ய அனுமதி கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் முன்மொழிவு சமர்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. இருப்பினும் நகராட்சியின் அவசர அவசியம் கருதி தற்போது 31.05.2022 ஒப்பந்த காலம் முடிவடைவதாலும் புதிய ஒப்பந்தபுள்ளி கோர இயலாததால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி திடக்கழிவு மேலாண்மை பணிக்காக மேற்கண்ட பணியாளர்களை வழங்கி வரும் அதே நிறுவனத்திற்கு பழைய ஒப்பந்தபுள்ளி விகிதத்திலேயே தூய்மை பணியாளர்களை 01.06.2022 முதல் 31.08.2022 முடிய மூன்று மாதங்களுக்கு வழங்கிட ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.25,37,457க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலன் கருதியும் மேற்படி ஒப்பந்ததாரரிடம் அதே ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்தின்படி 01.06.2022 முதல் 31.08.2022 முடிய நீட்டிக்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 445/2019/எச்1) | **தீர்மானம் எண்:- 47**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| 30.05.2022 | **பொருள் எண் 5**<br>இந்நகராட்சி பகுதிக்கு வருடந்தோறும் கால்வாய்கள் சுத்தம் செய்தல், குடிநீர் வினியோக பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள், மற்றும் இதர பணிகளுக்கு JCB இயந்திரம் வாடகைக்கு எடுக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி பணிகளுக்கு தோராயமாக வருடந்தோறும் 5.00 இலட்சம் வரை செலவிடப்படுகிறது. எனவே புதிய JCB இயந்திரம் வாங்கி வழங்க திருவாரூர் மாவட்டத்தில் உள்ள வெள்ளக்குடியில் செயல்பட்டு வரும் ONGC பொதுத்துறை நிறுவனத்தின் CSR நிதியிலிருந்து வாங்கி வழங்க கோரி மேற்கண்ட நிறுவனத்திற்கு கோரிக்கை கடிதம் அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 374/2022/எச்1) | **தீர்மானம் எண்:- 48**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.05.2022 | **பொருள் எண் 6**<br>இந்நகராட்சி பகுதியில் டெங்கு நோயினை கட்டுப்படுத்தும் பணிகளுக்கான ஒப்பந்த நிறுவனத்தின் அனுமதி காலம் 31.05.2022 உள்ளது. ஒப்பந்த அடிப்படையில் டெங்கு தடுப்பு பணியாளர்கள் மூலம் தற்போது வரை பணி நடைபெற்று வருகிறது. தற்போது கொரோனா, டெங்கு, மலேரியா கொசு போன்ற நோய்கள் மிகவும் அதிகரித்து வருவதாலும் டெங்கு நோயினை கட்டுப்படுத்த வேண்டி உள்ளதாலும் மற்றும் மேற்படி ஒப்பந்த நிறுவனத்தின் காலம் 31.05.2022 உடன் முடிவடைய உள்ளதால் மேலும் 01.06.2022 முதல் 31.08.2022 வரை மூன்று மாத காலத்திற்கு ஏற்கனவே உள்ள ஒப்பந்தபுள்ளி விலை விகிதத்தில் தி-கரன் சோசியல் டெவலப்மெண்ட் பவுன்டேஷன் நிறுனத்தின் மூலமாகவே டெங்கு பணியாளர்களை கொண்டு மேற்படி பணியினை மேற்கொள்ள நீட்டித்து வழங்கவும் அதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.11,20,398/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 484/2020//எச்1) | **தீர்மானம் எண்:- 49**<br>**அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>30.05.2022</td>
<td>
பொருள் எண் 7<br>
இந்நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு தேவையான லைம் பவுடர், பிளிச்சிங் பவுடர் மற்றும் இதர பொருட்கள் சப்ளை செய்யும் பணிக்கு 18.05.2022 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்த தொகை</th><th>ஒப்பந்தபுள்ளி தொகை</th><th>சதவிகிதம்</th></tr>
<tr><td>1</td><td>ஸ்ரீ செல்வ விநாயகா டிரேடர்ஸ் சென்னை</td><td rowspan="2">500000</td><td>497715</td><td>0.23 மதிப்பீட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>விநாயகா டிரேடர்ஸ் சென்னை</td><td>503255</td><td>0.88% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>
மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள ஸ்ரீ செல்வ விநாயகா டிரேடர்ஸ் சென்னை என்ற நிறுவனத்திடமிருநது வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.23% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
(ந.க.எண்.022/2022/எச்1)
</td>
<td>தீர்மானம் எண்:- 50<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 30.05.2022 | **பொருள் எண் 8**<br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 12ல் உள்ள பகுதியில் புதிய சமுதாய கழிப்பிடம் கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூபாய் 24.96 இலட்சத்தில் மேற்கொள்ளவும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நிர்வாக அனுமதியும் நிதி ஒதுக்கீடும் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.24.96 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம். | **தீர்மானம் எண்:- 51**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 30.05.2022 | **பொருள் எண் 9**<br>இந்நகராட்சியில் இயங்கி வரும் TN 50 U 2453 ஈப்பு வாகனம் 18.05.2021 அன்று தஞ்சாவூர் மாதா கோட்டை அருகில் விபத்துக்குள்ளானது. மேற்கண்ட இடத்தில் அவ்வழியாக சென்ற ரமேஷ், சாரங்கராஜன், செந்தில்குமார் ஆகியோர்களுக்கு காயம் ஏற்பட்டது. எனவே மேற்படி நபர்கள் இயக்கூர்தி விபத்து இழப்பீட்டு கோருரிமை தீர்ப்பாயம் சிறப்பு சார்பு நீதிமன்றம் தஞ்சாவூரின் வாயிலாக வழக்கு தொடர்ந்துள்ளார்கள். மேற்படி நீதிமன்றம் மூலம் சம்மன் பொது நோட்டீஸ் வரப்பட்டு 30.04.2022 அன்று அரசு வழக்கறிஞர் எதிர்வாதுரை தாக்கல் செய்துள்ளார். எனவே இந்நகராட்சியின் அரசு வழக்கறிஞர் திரு.S.மகாதேவன் B.Com, BL அவர்களை நியமனம் செய்தும், இரண்டு வழக்குகள் எதிர்கொள்ள ஆகும் செலவினம் ரூ.5000x2=10,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 316/2022/இ1) | **தீர்மானம் எண்:- 52**<br>**அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>30.05.2022</td>
<td>பொருள் எண் 10<br>இந்நகராட்சியில் குடிநீர் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் செய்யும் பணிகளுக்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 726 நாள் 29.05.2020ல் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் வீ.எழில்மாறன் என்ற ஒப்பந்ததாரருக்கு அனுமதி பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தகாலம் 31.05.2022ம் தேதியுடன் முடிவடைய உள்ளதால் கோடைகால குடிநீர் பணிகளின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட அதே ஒப்பந்தபுள்ளியின் விலை விகிதத்திலேயே பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் பணிகள் மேற்கொள்ளவும், மேலும் மூன்று மாதங்களுக்கு மட்டும் நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2,55,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 496/2020/இ1)</td>
<td>தீர்மானம் எண்:- 53<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>30.05.2022</td>
<td>பொருள் எண் 11<br>இந்நகராட்சி பகுதியிலுள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள், சிறிய நீர்தேக்க தொட்டிகள், சுகாதார வளாகங்கள் ஆகியவற்றில் உள்ள மோட்டார்கள் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு 26.04.2022 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்த தொகை</th><th>ஒப்பந்தபுள்ளி தொகை</th><th>சதவிகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு முகம்மது ரிபாய் ஒப்பந்ததாரர் கூத்தாநல்லூர்</td><td>530305</td><td>529944</td><td>0.07% மதிப்பீட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.பி.செந்தில்நாதன் ஒப்பந்ததாரர் மரக்கடை</td><td>530305</td><td>535130</td><td>0.91% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>
மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு முகம்மது ரிபாய் ஒப்பந்ததாரர் கூத்தாநல்லூர் என்ற ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.07% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண்.272/2022/இ1)</td>
<td>தீர்மானம் எண்:- 54<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

30.05.2022

**பொருள் எண் 12**

இந்நகராட்சி பகுதியிலுள்ள இந்தியா மார்க் II அடிபம்புகள் 137 எண்ணிக்கை பழுது நீக்கம் செய்யும் பணி மற்றும் Comproser பயன்படுத்தி சுத்தம் செய்யும் பணி மற்றும் உபகரணங்கள் வாங்கும் பணிக்கு 26.04.2022 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **ஒப்பந்த தொகை** | **ஒப்பந்தபுள்ளி தொகை** | **சதவிகிதம்** |
|---|---|---|---|---|
| 1 | செல்வவிநாயகா டிரேடர்ஸ் ஒப்பந்ததாரர் சென்னை | 149985 | 149965 | 0.13% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | டி.கே. சூப்பர் மார்க்கெட் சென்னை | 149985 | 150065 | 0.05% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள திரு செல்வவிநாயகா டிரேடர்ஸ் ஒப்பந்ததாரர் சென்னை என்ற ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை மதிப்பீட்டினை விட 0.13% குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.271/2022/இ1)

**தீர்மானம் எண்:- 55**
**அனுமதிக்கப்பட்டது**

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி